# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 362 | 4 Pages | 24.7.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 362 | 4 பக்கங்கள் | 24.7.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## கமலா ஹாரிஸ் அமெரிக்க அதிபரானால் பிரபல பாடகி டெய்லர் ஸ்விப்ட் துணை அதிபரா? உண்மை என்ன...!!



வாஷிங்டன், ஜூலை 24

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் 5ம் தேதி நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் போட்டியிடுகிறார். இதேபோன்று, ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிடும் முடிவுடன் பைடன் களம் இறங்கினார்.

ஆனால், வயது முதிர்வு, டிரம்புடனான விவாதத்தின்போது திணறல், உள்ளிட்ட சர்ச்சைகளால் கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு குரல்கள் எழுந்தன. கட்சியினரின் அதிருப்தி அதிகரித்த நிலையில், அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து விலகும் முடிவை எடுத்த பைடன், அதற்கான அறிவிப்பையும் நேற்று வெளியிட்டார்.

தொடர்ந்து, கமலா ஹாரிசை அதிபர் தேர்தலுக்கான வேட்பாளராக அறிவித்துதன்னுடையமுழுஆதரவையும்வெளிப்படுத்தினார். எனினும், 2025ம் ஆண்டு ஜனவரி வரை அதிபராக தொடர்ந்து பதவியில் நீடிப்பார்.

அமெரிக்காவில் பிரபல பாடகி மற்றும் பாடல் ஆசிரியராக டெய்லர் ஸ்விப்ட் (வயது 34) இருந்து வருகிறார். 2020ம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலின்போது, பைடன்மற்றும்கமலாஹாரிசுக்குஸ்விப்ட்தன்னுடைய ஆதரவை வெளிப்படுத்தினார்.


எனினும், இந்த முறை எந்த வேட்பாளருக்கும் தன்னுடைய ஆதரவை அவர் தெரிவிக்கவில்லை. இந்த சூழலில், ஸ்விப்டின் ரசிகர்கள் எக்ஸ் சமூக ஊடகத்தில் சில செய்திகளை பரப்பியுள்ளனர்.

அதில், நவம்பரில்வரவுள்ளதேர்தலில்ஜனநாயககட்சிவேட்பாளர்களை தேர்ந்தெடுக்க உதவுவதற்காக ஸ்விப்டின் ரசிகர்கள் தயாராக உள்ளனர். இதற்காக ஸ்விப்டின் கூட்டணியும் ரசிகர்களை இயக்க தயாராக உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதேபோன்று, காலியாக உள்ள துணை அதிபர் பதவிக்கு, 2020ம் ஆண்டில் தனக்கு ஆதரவு தெரிவித்த ஸ்விப்டை கமலா ஹாரிஸ் தேர்ந்தெடுப்பார் என்றும் ஒரு தகவல் பரவியது. ஆனால், இதன் உண்மை தன்மை என்னவென்று உறுதிப்படுத்தப்படவில்லை. ஸ்விப்டும் இதுபற்றி எதுவும் கூறவில்லை. அமெரிக்காவில், வடக்கு கரோலினா மாகாண கவர்னராக ராய் கூப்பர் உள்ளார். அதிபர் தேர்தலில் ஹாரிஸ் வெற்றி பெற்றால், துணை அதிபருக்கான கமலா ஹாரிசின் தேர்வாக கூப்பர் இருப்பார் என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

இதேபோன்று, கமலா ஹாரிசுக்கு கூப்பரும் தன்னுடைய ஆதரவை வெளிப்படுத்தி உள்ளார். ஹாரிஸ் அடுத்த அதிபராக வேண்டும். டிரம்பை வீழ்த்தி நம்முடைய நாட்டை ஒன்றிணைத்து வழிநடத்தி செல்வார். அவருக்காக பிரசாரம் செய்ய காத்திருக்கிறேன் என்று தெரிவித்து இருக்கிறார்.

## அமெரிக்கா: கார் விபத்தில் இந்திய மாணவி பலி



வாஷிங்டன், ஜூலை 24

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் தனலி பகுதியை சேர்ந்தவர் ஜித்தி ஹரிகா (வயது 25). இவர் அமெரிக்காவின் ஓக்லகோமா மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் கால்நடை மருத்துவக்கல்வி பயின்று வருகிறார்.

இந்நிலையில், மாணவி ஹரிகா கடந்த சனிக்கிழமை காரில் ஓக்லகோமா மாகாணத்தில் உள்ள லோகன் நகரில் நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தார். அப்போது, மோசமான வானிலை காரணமாக ஹரிகா சென்ற கார் உள்பட4கார்கள்ஒன்றோடுஒன்றுஅடுத்தடுத்துமோதிவிபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் மாணவி ஹரிகா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், உயிரிழந்த மாணவி ஹரிகாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் பெரும்பான்மையை நிரூபித்தார் நேபாள பிரதமர் சர்மா ஒலி

காத்மாண்டு, ஜூலை 24

நேபாளத்தில் பிரசந்தா தலைமையிலான அரசுக்கு கே.பி.சர்மா ஒலி தலைமையிலான நேபாள ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஆதரவை வாபஸ் பெற்றதால் பிரசந்தா அரசு கடந்த 12ம் தேதி கவிழ்ந்தது. சர்மா ஒலி ஆட்சி அமைக்க நேபாள காங்கிரஸ் கட்சி ஆதரவு தர முன்வந்தது. அதையடுத்து, கடந்த 14ம் தேதி, சர்மா ஒலியை புதிய பிரதமராக ஜனாதிபதி ராம்சந்திர பவுடல் நியமித்தார். கடந்த 15ம் தேதி, சர்மா ஒலி 4வது முறையாக பிரதமராக பதவியேற்றார். அவருடன் 21 புதிய மந்திரிகளும் பதவியேற்றுக்கொண்டனர்.

அரசியல் சாசனப்படி, 30 நாட்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். அதற்காக நேற்று நேபாள நாடாளுமன்றம் கூடியது. தனது அரசுக்கான பெரும்பான்மையை நிரூபிக்க சர்மா ஒலி நம்பிக்கை தீர்மானத்தை தாக்கல் செய்தார். அதன்மீது எம் பிக்கள் விவாதம் நடத்த சபாநாயகர் தேவ்ராஜ் கிமிரி 2 மணி நேரம் ஒதுக்கீடு செய்தார்.

விவாதத்துக்கு பதில் அளிக்க பிரதமர் சர்மா ஒலிக்கும் நேரம் ஒதுக்கீடு செய்தார். அதன்படி, சர்மா ஒலி விவாதத்துக்கு பதில் அளித்து பேசினார். அப்போது, ''நான் ஊழலில் சிக்கியது இல்லை. இனிமேலும் சிக்க மாட்டேன். யாரும் ஊழல் செய்ய அனுமதிக்க மாட்டேன். நிலையான அரசு அமைக்க 2 பெரிய கட்சிகள் ஒன்றுசேர்ந்துள்ளன'' என்று அவர் கூறினார்.

பின்னர், நம்பிக்கை தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடந்தது. மொத்தம் உள்ள 275 எம் பிக்களில், 263 பேர் மட்டும் சபைக்கு வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் வாக்கெடுப்பை புறக்கணித்தார். மீதி 262 பேரில், சர்மா ஒலிக்கு ஆதரவாக 188 எம் பிக்கள் ஓட்டு போட்டனர். எதிராக 74 பேர் வாக்களித்தனர். எனவே, நம்பிக்கைதீர்மானம்வெற்றிபெற்றது. நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் சர்மா ஒலி வெற்றி பெற்றதாக சபாநாயகர் தேவ்ராஜ் கிமிரி அறிவித்தார். இதன்மூலம், சர்மா ஒலி தனது அரசின் பெரும்பான்மையை நிரூபித்தார்.

# கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு

சென்னை, ஜூலை 24

சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.240.54 கோடி செலவில் உலக தரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 15.6.2023 அன்று திறந்து வைத்தார். 1,000 படுக்கை வசதிகள் கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில், இருதயவியல் துறை,

இருதய அறுவை சிகிச்சைத் துறை, நரம்பியல் துறை, நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை, புற்றுநோய் மருத்துவத் துறை, புற்றுநோய் அறுவை சிகிச்சைத் துறை, குடல் இரைப்பை மருத்துவத் துறை, குடல் இரைப்பை அறுவை சிகிச்சைத்துறை. சிறுநீரக அறுவை சிகிச்சைத் துறை, சிறுநீரக மருத்துவத் துறை, இரத்தநாள அறுவை சிகிச்சைத் துறை, மூளை இரத்த நாள கதிரியல் துறை ஆகிய உயர்சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகளை கொண்டுள்ளது.



கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது மருத்துவமனையில் செயல்பட்டு வரும் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் உடல்நிலை குறித்து விசாரித்ததோடு, அந்த நோயாளிகளின் உறவினர்களுடன் முதல்அமைச்சர் உரையாடினார்.

மேலும், நரம்பியல் சிகிச்சை பிரிவிற்கும் சென்று அங்கு உள்ள நோயாளிகளை சந்தித்து, அவர்களுக்கு வழங்கப்படும் இயன்முறை சிகிச்சைகளையும் பார்வையிட்டார்.

இதனையடுத்து, இங்கு செயல்பட்டு வரும் இதய கேத்லாப் ஆய்வகத்திற்கு சென்று ஆய்வு செய்து, நோயாளிகளிடம் சிகிச்சை விவரங்கள் குறித்தும் மருத்துவ வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படும் உணவுக் கூடத்திற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்று அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை சுவைத்து பார்த்து ஆய்வு செய்தார். பின்னர், பணியாளர்களின் வருகைப் பதிவேடு, மருந்துகள் இருப்பு பதிவேடு போன்றவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து, அதன் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வந்து செல்லும் இந்த மருத்துவமனைக்கு, கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பராமரிப்பு பணியாளர்களை நியமிக்குமாறும், டயாலிசிஸ் சிகிச்சை பிரிவிற்கு கூடுதல் டயாலிசிஸ் இயந்திரங்களை வழங்குமாறும் ஆணையிட்டார்.

மேலும் மருத்துவமனை முதல்வர் மற்றும் மருத்துவர்களிடம் மருத்துவமனையை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்றும், நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சைகளை காலதாமதமின்றி வழங்கிட வேண்டும் என்றும், அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் முதல்அமைச்சர் அறிவுறுத்தினார்.

## திமுக அரசு எப்போதும் மக்களுக்கு துணை நிற்கும்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூலை 24

சென்னை, புழல் அருகே உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் 2,124 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா வழங்கும் விழா நடைபெற்றது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது;



"மக்களுக்கு தி.மு.க. அரசு எப்போதும் துணை நிற்கும். மக்களும் தி.மு.க.அரசுக்குதுணைநிற்பார்கள் என்பதை நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40க்கு வெற்றி பெற செய்து நிரூபித்து உள்ளீர்கள். இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த ஆடை அவசியம். இதனை தி.மு.க. அரசு நிறைவேற்றி வருகிறது. இதன் அவசியம் அறிந்து 1970ல் கலைஞர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தொடங்கினார். தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியமாக தரம் உயர்த்தி முதலமைச்சர் மக்களுக்கு சேவை செய்து வருகிறார்."

இவ்வாறு அவர் பேசினார்.

## மத்திய பட்ஜெட் குறித்து ப.சிதம்பரம் கருத்து

சென்னை, ஜூலை 24

மத்திய பட்ஜெட் குறித்து முன்னாள் மத்திய நிதி மந்திரியும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் கூறி இருப்பதாவது:

தேர்தல் முடிவுகளுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை 2024ஐ நிதி மந்திரி படித்து இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையின் பக்கம் 30ல் குறிப்பிடப்பட்டுள்ள வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை கிட்டத்தட்ட ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையின் பக்கம் 11ல் தெரிவிக்கப்பட்ட பயிற்சி திட்டத்தையும் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.



ஏஞ்சல் வரியை ஒழிக்க பல ஆண்டுகளாக காங்கிரஸ் கெஞ்சியது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஏஞ்சல் வரி ஒழிக்கப்படும் என்று தேர்தல் அறிக்கை பக்கம் 31ல் குறிப்பிட்டுள்ளோம். இப்போது ஏஞ்சல் வரியை ரத்து செய்வதாக அறிவித்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் உள்ள வேறு சில யோசனைகளையும் நிதி மந்திரி காப்பி அடித்திருக்கலாம் என நினைக்கிறேன். அவற்றை பின்னர் பட்டியலிடுகிறேன்.

இவ்வாறு ப.சிதம்பரம் கூறி உள்ளார்.

## நிலமோசடி வழக்கு: எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு 2 நாள் போலீஸ் காவல்

கரூர், ஜூலை 24

ரூ.100 கோடி நிலமோசடி வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரின் ஆதரவாளர் மற்றும் அவரது வீடு, நிறுவனங்களில் கடந்த 5, 7, 11ம் தேதிகளில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை செய்தனர். மேலும் விஜயபாஸ்கர் மனைவி விஜயலட்சுமியிடமும் விசாரணை நடத்தினர். மேலும் பலரை சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்கு வரவழைத்து விசாரணை நடத்தினர். 5 வாரங்களாக தலைமறைவாக இருந்த முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் வழக்கின் முக்கிய நபரான பிரவீண் ஆகியோரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கேரளா மாநிலம் திருச்சூரில் ஜூலை 16ம் தேதி கைது செய்து கரூர் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, எம்.ஆர்.விஜயபாஸ்கரை திருச்சி மத்திய சிறையிலும், பிரவீணை குளித்தலை கிளை சிறையிலும் அடைத்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பாக எம்.ஆர்.விஜயபாஸ்கரை காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க கோரி கரூர் நீதிமன்றத்தில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் மனுதாக்கல் செய்திருந்தனர். இந்த மனு நேற்று கரூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1 நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி பரத்குமார், எம்.ஆர்.விஜயபாஸ்கரை, 2 நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதியளித்து உத்தரவிட்டார். இதையடுத்து எம்.ஆர்.விஜயபாஸ்கரை கரூர் காந்தி கிராமம் சின்னப்பா நகரில் உள்ள சி.பி.சி.ஐ.டி அலுவலகத்திற்கு அழைத்து சென்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாஞ்சோலை விவகாரம்: தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? அறிக்கை

நெல்லை, ஜூலை 24

மாவட்ட ஆட்சியர் மற்றும் புலிகள் காப்பக துணை இயக்குநர் தாக்கல் செய்த அறிக்கையில் கூறியிருப்பதாவது,



☐ தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்பூர்வ பணிப் பலன்கள், மாதாந்திர ஓய்வூதியம் ஆகியவற்றை முறையாக பெற்று வழங்க அரசு நடவடிக்கை.

☐ மணிமுத்தாறு அருகே அரசுசார்பில் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ள 240 வீடுகளை தொழிலாளர்களுக்கு வழங்க அரசு தயராக உள்ளது. இலவச வீட்டு மனைப் பட்டா, கலைஞர் கனவு இல்லத்தின் கீழ் வீடுகள் வழங்க நடவடிக்கை.

☐ ₹11.54 லட்சம் மதிப்பு கொண்ட ஒரு வீட்டுக்கு அரசு ₹8.5 லட்சம் மானியமாக வழங்குகிறது. மீதம் ₹3.04 லட்சத்தை மட்டும் பயனாளிகள் செலுத்த வேண்டும். கூடுதல் மானியம் அளித்து வீடுகளை வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

☐ 55 வயதுக்குட்பட்ட தொழிலாளர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் மற்றும் நீட்ஸ் திட்டத்தின் கீழ் சுய தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் ஏற்பாடு செய்ய அரசு தயார்.

☐ இளைஞர்களுக்கு திறன் பயிற்சியும், அதற்கேற்ற வேலைவாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும்.

☐ சிறு கால்நடைப் பண்ணை அமைக்க அல்லது கறவை மாடுகள், ஆடுகள் வாங்கிட வட்டியில்லாத கடன் வழங்க நடவடிக்கை.

☐ குழந்தைகளுக்கு பள்ளிக்கல்வி பாதிக்காத வகையில் அவர்கள் விரும்பிய பள்ளியில் சேர்க்கவும், விடுதிகளில் தங்க வைத்து படிக்க வைக்கவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்.

☐ தொழிலாளர்களின் ஆதார், ரேஷன் கார்டு உள்ளிட்ட அடையாள அட்டைகளை அவர்கள் விரும்பும்

இடத்திற்கு மாற்றி வழங்க ஒற்றைச் சாரள முறையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்.

☐ தொழிலாளர்களுக்கு கூடுதல் இழப்பீடு வழங்கவும் 'பர்மா பாம்பே டிரேடிங் கம்பெனி' நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# 55 மின்சார ரயில்கள் ரத்து: தெற்கு ரெயில்வே தகவல்

சென்னை, ஜூலை 24

தெற்கு ரெயில்வே அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது,




ஜூலை 23, 2024 முதல் ஆகஸ்ட் 14, 2024 வரை தாம்பரம் ரயில்வே யார்டு மேம்பாட்டு பணிகள் நடைபெற உள்ளதால் சென்னை கடற்கரைதாம்பரம் செங்கல்பட்டு இடையே 55 மின்சார ரயில்கள் இரு மார்க்கங்களிலும் ரத்து செய்யப்படுகிறது.

ரத்து செய்யப்பட்ட 55 மின்சார ரயில்கள்

• அதிகாலை முதல் காலை 09:20 மணி வரை கால அட்டவணைப்படி மின்சார ரயில்கள் வழக்கம்போல் இயங்கும்.

• மதியம் 01:00 மணியிலிருந்து இரவு 10:20 வரை கால அட்டவணைப்படி மின்சார ரயில்கள் வழக்கம்போல் இயங்கும்.

ரத்து செய்யப்பட்ட மின்சார ரயில்களுக்கு பதிலாக இயக்கப்படும் சிறப்பு மின்சார ரயில்களின் கால அட்டவணை

• பயணிகளின் சிரமத்தை குறைப்பதற்காக, பல்லாவரத்திலிருந்து கூடுவாஞ்சேரி வரை இரு மார்க்கங்களிலும் கூடுதல் பேருந்து சேவைகளை இயக்குவதற்கு மாநில போக்குவரத்து துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

• ரயில்களின் ரத்து குறித்த விவரங்களைரயில் நிலைய அறிவிப்பு (Station Announcement) / அறிவிப்பு பலகைகள் மூலமாகவும், மேலும் செய்தித்தாள்கள். டிவி சேனல்கள், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் பயணிகள் தெரிந்து கொள்ளலாம்.

• மேலும், சென்னை எழும்பூர், பல்லாவரம், தாம்பரம், கூடுவாஞ்சேரி ஆகிய ரயில் நிலையங்களில் பயணிகள் உதவி மையம் (Passenger Help Desk) ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

• கூடுதலாக ரயில்வே பாதுகாப்பு படையினரும் / டிக்கெட் பரிசோதகர்களும் பயணிகளின் உதவிக்காக ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

• பயணிகளின் வசதிக்காக கூடுதல் டிக்கெட் கவுண்டர்கள் செங்கல்பட்டிலும், கூடுவாஞ்சேரி ரயில் நிலையங்களில் இயக்கப்பட உள்ளது.

• ரயில் பயணிகளின் பாதுகாப்புக்காக இந்த பராமரிப்புப் பணி நடைபெறுவதன் காரணமாக பயணிகள் தங்கள் பயணத்தை அதற்கேற்றவாறு திட்டமிடும்படி தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் கேட்டுக்கொள்கிறது. பயணிகளுக்கு ஏற்படும்

சிரமத்திற்கு வருந்துகிறோம்.

# வங்காளதேச வன்முறை: மத்திய அரசு மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் ஜி.கே. வாசன்

சென்னை, ஜூலை 24

பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக கடந்த 1971ல் நடந்த போரில் பங்கேற்ற வங்காளதேசத்தின் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்தது. இந்த இடஒதுக்கீட்டை எதிர்த்து இளைஞர்களால் கடந்த வாரம் முதல் கடுமையான போராட்டம் முன்னெடுக்கப்பட நிலையில் போராட்டம் கலவரமாக மாறி பல வன்முறை வெறியாட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன.



இந்த வன்முறையில் 133 க்கும் அதிகமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் போராட்டக்காரர்களை கண்டதும் சுடுவதற்கு அந்நாட்டு ராணுவத்துக்கு அரசு உத்தரவிட்டது. இந்நிலையில் இடஒதுக்கீட்டை ஆளும் ஹசீனாவின் அரசு ரத்து செய்துள்ளது.

இருப்பினும் போராட்டம் இன்னும் அடங்காத நிலையில் அங்கு சிக்கியுள்ள இந்திய பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் நாடு திரும்பி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் கூறியிருப்பதாவது,

மத்திய மாநில அரசுகள் வங்கதேசத்தில் உள்ள தமிழகமாணவர்களை தமிழ்நாட்டிற்கு பத்திரமாக அழைத்து வர தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வங்கதேசத்தில் நடைபெற்ற போராட்டத்தில் கலவரம் ஏற்பட்டதன் காரணமாக இந்திய மாணவர்கள் மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள்.

மத்திய அரசு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

இந்திய மாணவர்களை பத்திரமாக அவரவர் மாநிலத்திற்கு அழைத்து செல்ல வேண்டும்.

குறிப்பாகதமிழகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்கு கல்வி பயின்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன என்று கூறியுள்ளார்.

# கள் விற்பனையை ஏன் அனுமதிக்க கூடாது அரசுக்கு ஐகோர்ட்டு கேள்வி

சென்னை, ஜூலை 24

சென்னையைச் சேர்ந்த முரளிதரன் தாக்கல் செய்த மனுவில், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற தகவலில், 202021ம் ஆண்டு 39 ஆயிரத்து 760 கோடி ரூபாயும், 2021 22ம் ஆண்டில் 42 ஆயிரத்து 421 கோடி ரூபாயும் விற்று முதல் பெற்றதாக கூறிய டாஸ்மாக் நிர்வாகம், இந்த ஆண்டுகளில் 161 கோடி ரூபாயும், 69 கோடி ரூபாயும் இழப்பை சந்தித்ததாகக் கூறியுள்ளது



டாஸ்மாக்குக்கு மதுபானம் சப்ளை செய்யும் நிறுவனங்கள், பெரும்பாலும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தமானதாக உள்ளது.

இதனால் டாஸ்மாக் நிர்வாகம் குறிப்பிட்ட சில பிராண்ட் மதுபானங்களை மட்டும் விற்கிறது.

தமிழகத்தில் விற்கப்படும் மதுபானங்களின் தரத்தை விட, வெளி மாநிலங்களில் மதுபானங்களின் தரம் அதிகமாக உள்ளது.

டாஸ்மாக் கடைகளில் பாட்டில்களுக்கு10ரூபாய் முதல் 50 ரூபாய் வரை அதிகம் விற்பனை செய்வதாகவும், இதன்மூலம் கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாயை டாஸ்மாக் கடை விற்பனையாளர், மேலாளர், துறை அமைச்சர் பகிர்ந்து கொள்வதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மதுபானபாட்டில்களில் அச்சிடப்பட்டிருக்கும் விற்பனைவிலையை விட கூடுதல் விலை கொடுக்க வேண்டாம் என எல்லா டாஸ்மாக் கடைகளிலும் அறிவிப்பு பலகை வைக்க உத்தரவிட வேண்டும். கள் விற்பனைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க, சில கட்டுப்பாடுகளுடன் விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும்

இவ்வாறுகூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி கிருஷ்ணகுமார் ,நீதிபதி குமரேஷ்பாபு ஆகியோர் வழக்கிற்கு பதில் அளிக்கும்படி அரசுக்கு உத்தரவிட்டனர்.

# மாநில ஒருங்கிணைப்பாளராக பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் தேர்ந்தெடுத்திருப்பதை முழுமனதுடன் வரவேற்கிறேன்: பா. ரஞ்சித்

சென்னை, ஜூலை 24

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டார். அவரது கொலையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் ஈடுபட்டது தெரிய வந்தது.



போலீஸார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவரது கொலையில் 15க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதை தொடர்ந்து, பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளராக ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடியும், மாநிலத் தலைவராக வழக்கறிஞர் பி. ஆனந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பா. ரஞ்சித் வாழ்த்து செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக வழக்கறிஞர் பி. ஆனந்தன் அவர்களையும்,மாநிலஒருங்கிணைப்பாளராக பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் அவர்களையும் தேர்ந்தெடுத்திருப்பதை முழுமனதுடன் வரவேற்று, என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்!

மறைந்த சமத்துவத் தலைவர் அண்ணன் ஆம்ஸ்ட்ராங் தன்னலமற்ற களசெயற்பாட்டைப் போல தலித் மக்களின் விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும், சுயமரியாதைக்காகவும் எவ்விதமான சமரசமும் பின்வாங்கலும் இல்லாமல் சித்தாந்தத் தெளிவுடன் பாபாசாகேப் அம்பேத்கர் கண்ட கனவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கவும், தலித் மக்களின் நலனில் அக்கறை கொண்டு களம் காணவும் மனதார வாழ்த்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# ஏரியில் மீன்பிடித்ததாக கூறி 2 வாலிபர்களை மின் கம்பத்தில் கட்டி வைத்து தாக்கிய கும்பல்

ஓமலூர், ஜூலை 24

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள கோட்டை மாரியம்மன் கோவில் ஊராட்சியில் உள்ளது மூங்கில் ஏரி. இந்த ஏரியில் கடந்த 5 ஆண்டுகளாக தண்ணீர் உள்ளது. இதில் மீன்கள் அதிக அளவில் உள்ளன. இந்த ஏரியில் பச்சனம்பட்டி ஊராட்சி மோட்டூர் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் மற்றும் பிரகாஷ் ஆகிய இருவரும் இரவு நேரங்களில் வலை விரித்து மீன் பிடித்ததாக கூறப்படுகிறது.



இதனால் இவர்கள் இருவரையும் வேலகவுண்டனூர் பகுதியை சேர்ந்த சிலர் வீட்டுக்கு சென்று அவர்களை பிடித்து வந்து வேலகவுண்டனூர் பகுதியில் உள்ள மின் கம்பத்தில் கட்டி வைத்து இருசக்கர வாகனத்திற்கு பயன்படுத்தப்படும் கிளட்ச் வயர்மற்றும்கரும்பு ஆகியவற்றால் சரமாரியாக தாக்கினர். தொடர்ந்து இரவு முழுவதும் கட்டி வைத்து சிலர் மாறி மாறி தாக்கியதாக கூறப்படுகிறது. தகவல் தெரிந்து உறவினர்கள் சென்று கேட்ட போது வாலிபர்கள் இருவரையும் விட மறுத்து மீண்டும் தாக்கியுள்ளனர். இது குறித்து வாலிபர்களின் உறவினர்கள் ஓமலூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற ஓமலூர் போலீசார் ஜெயக்குமார் மற்றும் பிரகாஷ் ஆகிய இருவரையும் மீட்டு ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். 2 வாலிபர்களுக்கும் உடல் முழுவதும் ஆங்காங்கே காயங்கள் ஏற்பட்டுள்ளது.

இது பற்றி தகவல் அறிந்து ஓமலூர் அரசு மருத்துவ மனையில் வாலிபர்களின் உறவினர்கள் கூடியதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து ஓமலூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர் .

இது குறித்து பாதிக்கப்பட்டவர் கூறும்போது ஏரியில் மீன் பிடிக்க சென்ற 2 வாலிபர்களை கட்டி வைத்து கடுமையாக தாக்கியுள்ளனர். தாக்கியவர்கள் வேலகவுண்டனூர் பகுதியை சேர்ந்த சிலர் என தெரியவருகிறது. ஏரியில் மீன்பிடித்து தவறு செய்திருந்தால் போலீசாரிடம் ஒப்படைக்கலாம் அல்லது உறவினர்களிடம் கூறலாம். அதற்காக கட்டி வைத்து தாக்குதல் நடத்தி உள்ளனர். போலீசார் உரிய நடவடிக்கை எடுத்து தாக்கியவர்களை கைது செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

# முறைகேடாக விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சிய விவசாயி மீது வழக்கு

ஈரோடு, ஜூலை 24

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே முருங்கத்தொழுவு ஊராட்சிக்குட்பட்ட மொட்டையன் காட்டுப்புதூர் பகுதிக்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் பைப் லைன் அமைத்து சுமார் 13 கிராமங்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 2 வருடங்களாக அந்தப் பகுதிகளுக்கு போதுமான குடிநீர் கிடைக்கவில்லை. இதனால் ஊராட்சி நிர்வாகம் சார்பில் லாரிகள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது. பைப்லைன் மூலம் போதுமான தண்ணீர் அனுப்பப்பட்டும் மொட்டையன் காட்டுபுதூர் பகுதிக்கு ஏன்? சரியாக தண்ணீர் கிடைப்பதில்லை என்பதற்காக முருங்க த் தொழுவு ஊராட்சி நிர்வாகத்தினர் பைப் லைனை ஆய்வு செய்தனர். அப்போது முருங்கத் தொழுவை சேர்ந்த பெரியசாமி என்ற விவசாயி கடந்த 2 ஆண்டுகளாக தனது விவசாய நிலத்திற்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டக் குழாயை உடைத்து முறைகேடாகதண்ணீர்கொண்டு சென்றது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து முருங்கத்தொழுவு ஊராட்சித் தலைவர் பிரபா தமிழ்செல்வன் சென்னிமலை போலீசில் புகார் செய்தார்.

சென்னிமலை போலீசார் பெரியசாமி மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக கொண்டு செல்லப்பட்ட கூட்டு குடிநீர் திட்ட குழா யை உடைத்து முறைகேடாக விவசாய நிலங்க ளுக்கு தண்ணீர் பாய்ச்சிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாடியில் இருந்து கீழே விழுந்த அரசு ஊழியர் பலி



சின்னசேலம், ஜூலை 24

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் செங்குந்தர் 6வது தெருவில் வசித்து வந்தவர் சுந்தர்ராஜன் (வயது 40). இவருக்கு நித்தியா என்ற மனைவியும் 2 ஆண் குழந்தைகளும் உள்ளனர். சுந்தர் ராஜன் கடந்த 7 வருடங்களாக சின்னசேலம் வான கொட்டாய் பகுதியில் உள்ள அரசு ஐ.டி.ஐ. நிறுவனத்தில் இளநிலை பயிற்சி அலுவலராக பணியாற்றி வந்தார்.

சனி, ஞாயிறு விடுமுறையை கழிப்பதற்காக இவரது மனைவியும் குழந்தைளும் சிதம்பரம் சென்றதாக கூறப்படு கிறது.

சுந்தர்ராஜன் மட்டும் வீட்டில் தனியாக இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் இன்று காலை பக்கத்து வீட்டுக்காரர் அவரது வீட்டின் மாடியில் இருந்து கீழே பார்த்தபோது வீட்டின் சந்தில் சுந்தர்ராஜன் கிடந்துள்ளார். அருகே சென்று பார்த்த போது சுந்தர்ராஜன்தலையில்பலத்த காயத்துடன் இறந்து கிடந்தது தெரியவந்தது. அவர் மாடியில் இருந்து தவறி கீழே விழுந்து இறந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இது குறித்து சின்னசேலம் போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த இன்ஸ்பெக்டர் ஹரி கிருஷ்ணன் தலைமையிலான போலீசார் சுந்தர்ராஜனின் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர் இது குறித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த சின்னசேலம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 55 மின்சார ரெயில்கள் ரத்து எதிரொலி: கூடுதல் பேருந்துகளை இயக்க போக்குவரத்து துறை முடிவு

சென்னை, ஜூலை 24

மாநகர போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

தாம்பரம் ரயில் நிலையத்தில் 23.07.2024 முதல் 14.08.2024 வரை பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், காலை 09.30 மணி முதல் பிற்பகல் 13.30 மணி வரையும் மற்றும் இரவு 22.00 மணி முதல் 23.59 வரை சென்னை கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து தாம்பரம்/செங்கல்பட்டு செல்லும் இரயில்கள் பல்லாவரம் இரயில் நிலையம் வரையும், செங்கல்பட்டிலிருந்து சென்னை கடற்கரைசெல்லும் இரயில்கள் கூடுவாஞ்சேரி வரை மட்டுமே இயக்கப்படும் என தென்னக ரயில்வே அறிவித்துள்ளது.

எனவே, அவ்வழித்தடத்தில் பயணம் செய்யும் பயணிகள் நலன் கருதி மா.போ.கழகம் 23.07.2024 முதல் 14.08.2024 வரை மேற்குறிப்பிட்ட நேரங்களில் பல்லாவரம் வழியாக கூடுவாஞ்சேரிக்கு தற்போது 60 பேருந்துகள் மூலம் 571 பயண நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

மேலும் விமான நிலையம் மெட்ரோ முதல் செங்கல்பட்டுக்கு கூடுதலாக



50 பெரிய பேருந்துகளை மா.போ.கழக இயக்க உள்ளது. மற்றும் பல்லாவரம் ரயில் நிலையத்திலிருந்து பல்லாவரம் பேருந்து நிலையத்திற்கு 5 சிற்றுந்துகள் மற்றும் கூடுவாஞ்சேரி ரயில் நிலையம் முதல் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையத்திற்கு 5 சிற்றுந்துகள் *shuttle service* ஆக இயக்க உள்ளது. மேற்குறிப்பிட்ட நாட்களில் முக்கிய பேருந்து நிலையங்களில் அலுவலர்களை நியமித்து இப்பேருந்துகள் இயக்கத்தினை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என கூறியுள்ளது.

## ஆன்லைன் மூலம் உடனடியாக கட்டட அனுமதி: அமைச்சர் முத்துசாமி



சென்னை, ஜூலை 24

ஆன்லைன் மூலம் உடனடியாக கட்டட அனுமதி பெறுவது தொடர்பாக அமைச்சர் முத்துசாமி விளக்கம் அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

★ வீடுகள் கட்டும் மக்களின் கனவை எளிதாக்கவே ஆன்லைன் மூலம் கட்டட அனுமதி அளிக்கப்படுகிறது.

★ ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர் அளிக்கும் விபரங்கள் அடிப்படையில் உடனடி அனுமதி அளிக்கப்படும்.

★ ஆய்வின்போது விண்ணப்பத்தில் இருக்கும் விபரங்கள் சரியாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

## அடிப்படை வசதிகள் கேட்டு பொதுமக்கள் சாலை மறியல்



பல்லடம், ஜூலை 24

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே பொங்கலூர் ஒன்றியம், நாச்சிபாளையம் ஊராட்சி ரங்கபாளையம் பிரிவில் ஜி.என். கார்டன் பகுதி உள்ளது.

இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், தெருவிளக்கு, தண்ணீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கேட்டு ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை மனு அளித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் ஊராட்சி நிர்வாகம் இது வரை நிறைவேற்றி கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதையடுத்து அப்பகுதியை சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட சுமார் 100க்கும் மேற்பட்டோர் இன்று காலை திடீரென ஒன்று திரண்டு நாச்சிப்பாளையம் திருப்பூர் காங்கயம் மெயின் ரோட்டில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற அவிநாசி பாளையம் போலீசார் பொதுமக்களுடன் சமரசபேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது ஊராட்சி நிர்வாகத்துடன் பேசி அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என உறுதி அளித்ததை தொடர்ந்து சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

இதனால் திருப்பூர் காங்கயம் மெயின் ரோட்டில் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் பொதுமக்கள் நடத்திய போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## ரூ.75 லட்சம் மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல் 2 பேர் கைது



தூத்துக்குடி, ஜூலை 24

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே கல்லாமொழி கிராம கடற்கரை வழியாக இலங்கைக்கு பீடி இலை மூட்டைகள் கடத்தப்பட இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனைதொடர்ந்து தூத்துக்குடி 'கியூ' பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதா, சப்இன்ஸ்பெக்டர்கள் ஜீவமணி தர்மராஜ், செல்வகுமார், ராமச்சந்திரன், சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராமர், தலைமை காவலர் இருதய ராஜ்குமார், இசக்கிமுத்து, முதல் நிலை காவலர் பழனி பாலமுருகன் மற்றும் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது கல்லாமொழி கடற்கரை வழியாக இன்று அதிகாலை 2 மணிக்கு சந்தேகத்திற்கிடமாக வந்த லோடு வேனை நிறுத்தி சோதனை நடத்தினர். அப்போது அதில் சுமார் 30 கிலோ எடை கொண்ட 106 பீடிஇலை மூட்டைகள் இருந்தது தெரியவந்தது.

அவற்றை இலங்கைக்கு படகில் கடத்துவதற்காக கொண்டு வந்ததும் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து அதனை பறிமுதல் செய்த போலீசார், வாகனத்தை ஓட்டி வந்த சிவகங்கை மாவட்டம் ஆரக்கோட்டை காரைக்குடியை சேர்ந்த அருள் விஜயகாந்த் (வயது 35) மற்றும் நெல்லை மாவட்டம் பணகுடி மங்கம்மா சாலையைச் சேர்ந்த பாண்டியன் (40) ஆகிய 2 பேரையும் கைது செய்தனர். மேலும் பைபர் படகையும், வேனையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பிடிபட்ட பீடி இலைகளின் மதிப்பு ரூ. 75 லட்சம் என்று போலீசார் தெரிவித்தனர்.

## எடப்பாடி பழனிசாமி அம்மா உணவகத்திற்காக எந்த நிதியும் ஒதுக்கவில்லை: பெங்களூர் புகழேந்தி குற்றச்சாட்டு



ஓசூர்: ஜூலை 24

ஓசூரில் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகி பெங்களூர் புகழேந்தி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அம்மா உணவகம் மேம்பாட்டுக்காக ரூ.21 கோடி நிதி ஒதுக்கியுள்ள தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். அம்மா உணவகத்தின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும் அவர் மேலும் பல கோடி நிதி ஒதுக்க வேண்டும்.

பல மாநிலங்களில் இந்த திட்டம் தோல்வியடைந்துள்ளது. ஆனால், தமிழகத்தில் மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது.

தனது 4 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அம்மா உணவகத்திற்கு எந்த நிதியையும் ஒதுக்காமல் ஏமாற்றியவர் எடப்பாடி பழனிசாமி.


தமிழ்நாட்டில் உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணத்தை குறைத்தால் மக்களுக்கு பயனுள்ளதகாக அமையும். மத்தியில் பிரதமர் நாற்காலி ஆடிக் கொண்டிருக்கிறது. அது நிரந்தரமானது அல்ல.

சந்திரபாபு நாயுடுவும், நிதீஷ் குமாரும் எப்போது வேண்டுமானாலும் பிரதமர் நாற்காலியை தள்ளி விடுவார்கள். நாட்டில் எதிர்கட்சிகள் வலுப்பெற்றுள்ளன. ஜனநாயகம் தழைத்தோங்கி உள்ளது.

இவ்வாறு அவர் நிருபர்களிடம் கூறினார்.

அப்போது ஜான் திமோதி, ராஜேந்திர கவுடா, ஜெயசந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## ஓடும் ஆட்டோவில் இருந்து குதித்து கைதி தப்பி ஓட்டம்



நெல்லை: ஜூலை 24

பாளையங்கோட்டை அருகே உள்ள திருமலை கொழுந்துபுரத்தை அடுத்த மணக்காடு கிராமத்தை சேர்ந்தவர் நாராயணன். இவரது மகன் சுரேஷ் (வயது 21).

இவர் சம்பவத்தன்று அந்த பகுதியில் அடிதடியில் ஈடுபட்டதாகவும், ஒரு பெண்ணிடம் பிரச்சனையில் ஈடுபட்டதாகவும் பாளைதாலுகாபோலீசில் அளிக்கப்பட்ட புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை தேடி வந்தனர். மானூர் பகுதியில் பதுங்கி இருந்த அவரை நேற்று மாலை கைது செய்தனர்.

பின்னர் இரவில் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைப்பதற்காக இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி உத்தரவின் பேரில்

முதல்நிலை காவலர் வீரமணி, பெண் காவலர் ஆஷிகா ஆகியோர் சுரேசை ஒரு ஆட்டோவில் அழைத்து சென்றுள்ளனர்.

ஆட்டோ நெல்லைமதுரை நான்குவழிச்சாலையில் கக்கன் நகர் மேம்பாலம் அருகே வந்து கொண்டிருந்த போது திடீரென சுரேஷ் ஆட்டோவில் இருந்து வெளியே குதித்து தப்பி ஓடினார்.

உடனே காவலர்கள் அவரை பின்தொடர்ந்து துரத்தி சென்ற நிலையில், அப்பகுதியில் உள்ள இருள் சூழ்ந்த பகுதி வழியாக சுரேஷ் தப்பிச் சென்றார்.

இதையடுத்து காவலர்கள் 2 பேரும், தாலுகா போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் உத்தரவின் பேரில் தாலுகா போலீசாரும், தனிப்படையினரும் தப்பியோடிய சுரேசை தேடி வருகின்றனர்.

## செந்தில் பாலாஜியின் உடல் நிலையில் முன்னேற்றம்

சென்னை, ஜூலை 24

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சிறையில் உள்ளார்.

இந்த மனு இன்று விசாரணைக்கு வரும் நிலையில், சிறையில் இருந்த செந்தில் பாலாஜிக்கு நேற்று திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து அவரை பலத்த பாதுகாப்புடன் சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அதன் பிறகு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஓமந்தூரார் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஏற்கனவே அவர் இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் என்பதால் அது தொடர்பான மருத்துவ பரிசோதனைகளை டாக்டர்கள் மேற்கொண்டனர். இ.சி.ஜி., எக்கோ, எக்ஸ்ரே போன்ற பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதில் செந்தில் பாலாஜியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். பரிசோதனைகள் அனைத்தும் முடிந்த பிறகு அவரது டிஸ்சார்ஜ் பற்றி முடிவு செய்யப்படும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தொடங்கியது



சென்னை, ஜூலை 24

தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் பி.இ., பி.டெக் படிப்புகளுக்கான கலந்தாய்வு இன்று தொடங்கியது. 2 லட்சம் மாணவமாணவிகள் கல்லூரிகளில் சேருவதற்கு தகுதியானவர்களாக அறிவிக்கப்பட்டது. சென்னை கிண்டியில் உள்ள தொழில்நுட்ப இயக்ககத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி கலந்தாய்வை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத இட ஒதுக்கீடு இன்று தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து சிறப்பு இடஒதுக்கீடு பிரிவினருக்கான கலந்தாய்வு தொடங்குகிறது. விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு கவுன்சிலிங் நடைபெறும்.

பொதுப்பிரிவு கலந்தாய்வு 29ந்தேதி தொடங்குகிறது. பல்வேறு கட்டங்களாக நடைபெறும் கலந்தாய்வு செப்டம்பர் மாதம் 11ந்தேதி வரை நடக்கிறது.

தமிழகத்தில் தற்போது 433 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் உள்ள 2.41 லட்சம் இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும். எல்லோருக்கும் இடங்கள் கிடைக்கும். ஆனால் விரும்பிய கல்லூரிகளில் பாடப்பிரிவுகள் கிடைப்பதுதான் கடினம்.


பொறியியல் கல்லூரிகளில் சேர மாணவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

முதலமைச்சரின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் அரசு பள்ளி மாணவர்கள் அதிகளவில் சேர்ந்து வருகிறார்கள். படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் பாடங்கள் உள்ளன. 3 சுற்றுகளாக ஆன்லைன் வழியாக கலந்தாய்வு நடைபெறுகிறது.

கலந்தாய்வு முடிந்த பிறகும் மாணவர்கள் விரும்பினால் கல்லூரிகளில் சேருவதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

இந்த ஆண்டு 8 கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. போதிய கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தால் மூடப்பட்டுள்ளது. புதிதாக 3 கல்லூரிகள் உருவாகி உள்ளன. அரசு பள்ளியில் படித்த மாணவர்கள் 36 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

## பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்காக திருப்பூரில் இருந்து 10 லட்சம் டீசர்ட் பனியன்கள் ஏற்றுமதி



திருப்பூர், ஜூலை 24

பின்னலாடை நகரான திருப்பூரில் இருந்து வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு பனியன்கள் உள்ளிட்ட ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் சர்வதேச அளவில் நடைபெறும் விளையாட்டு போட்டிகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஆர்டரின் பேரில் பனியன்கள் தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஐ.பி.எல். கிரிக்கெட் , உலக கால்பந்து போட்டி உள்பட சர்வதேச அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டு போட்டிகளுக்கு திருப்பூரில் இருந்து பனியன்கள் உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

தற்போது உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வருகிற 26ந்தேதி முதல் நடைபெற உள்ள நிலையில் அப்போட்டியில் பங்கேற்கும் பார்வையாளர்கள் அணிவதற்காக திருப்பூரில் உள்ள பேக் பே இந்தியா நிறுவனம் 10 லட்சம் டீசர்ட் பனியன்களை தயாரித்து அனுப்பி வைத்துள்ளது.

இது குறித்து அந்நிறுவனத்தின் உரிமையாளர்களான தீபா ஜெயன் மற்றும் அவரது மகள் ஐஸ்வர்யா ஆகியோர் கூறியதாவது:

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்காக எங்களது நிறுவனம் மூலம் பெற்ற ஆர்டர்களில் இதுவரை 70 சதவீத ஆர்டர்களை முடித்து அனுப்பி வைத்துவிட்டோம். மீதமுள்ள 30 சதவீத ஆர்டர்களை முடிப்பதற்கு 6 சிறு, குறு நிறுவனங்கள் மூலம் பனியன் தயாரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

ஏற்கனவே 2023ம் ஆண்டு பிரான்சில் நடந்த ரக்பி உலக கோப்பைக்கான போட்டிக்கும் பனியன்கள் தயாரித்து அனுப்பி வைத்திருந்தோம்.

ஐ.ஓ.சி.யின் அதிகாரபூர்வ உரிம திட்டத்தின் மூலம் எங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு தயாரித்து அனுப்புகிறோம். ஜவுளி உற்பத்தியில் பல நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்படுவதில்லை. பல ஆண்டுகளாக நாங்கள் உருவாக்கிய நம்பகத்தன்மையின் மூலம் நாங்கள் சுமூகமாக இயங்கி வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உதயநிதி துணைமுதலமைச்சரானால் இந்து தர்மத்திற்கு மிகப்பெரிய ஆபத்து: எச்.ராஜா



காஞ்சிபுரம், ஜூலை 24

காஞ்சிபுரம் அடுத்த மேல்சிறுணைகிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பா. ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

சனாதானம் என்பது என்ன? என்று உச்ச நீதி மன்றமே கூறிவிட்டது. இந்து வாழ்வியலே சனாதானம்.

சனாதனத்தில் கூறியுள்ள உணவு, கல்வி, மருத்துவம் போன்றவை தற்பொழுது மிகப் பெரிய வியாபாரமாக மாறிவிட்டது, சனாதனம் பற்றிய எதிர்ப்பு தமிழகத்தில் 180 ஆண்டுகளுக்கு மேலாக காதில் விழுந்து கொண்டிருக்கிறது.

சனாதன தர்மத்தில் கூறியுள்ளது போல் கட்டணம் இல்லாமல் கல்வியை இலவசமாக வழங்க வேண்டும். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சானாதனத்தை தொடர்ந்து எதிர்த்து பேசி வருகிறார்.

உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சர் ஆனால் விரைவில் தமிழ்நாட்டில் இந்து தர்மத்திற்குமிகப்பெரியஆபத்து வர காத்திருக்கிறது.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதான திருவேங்கடத்தை போலீசார் அவசர அவசரமாக சுட்டுக் கொன்றது ஏன்? இதில் ஆரம்பக்கட்டத்தில் இருந்தே எதிர்கட்சிகள் அனைவரும் சி.பி.ஐ. விசாரணை கொண்டு வந்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பலத்த சூறைக்காற்றுக்கு அரசு பள்ளி காம்பவுண்டு சுவர் இடிந்தது



கொடைக்கானல், ஜூலை 24

கொடைக்கானலில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக சாரல் மழை பெய்து வந்த நிலையில் தற்போதுமழைமுற்றிலும் குறைந்து குளிர்ச்சியான காலநிலை நிலவி வருகிறது.

ஆனால் ஆடி மாதம் என்பதால் காலை முதலேயே காற்றின் வேகம் அதிகமாக காணப்படுகிறது. பகல் நேரங்களில் புழுதியை வாரி இறைத்தபடி காற்று வீசுவதால் நடந்து செல்பவர்களும், வாகனங்களில் செல்பவர்களும், மிகுந்த சிரமம் அடைந்து வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்களை கூட காற்றின் வேகம் தன்வசப்படுத்தி நிலைகுலைய செய்து விடுகிறது. இதனால் சிறிது கவனம் சிதறினாலும் வாகன ஓட்டுனர்கள் விபத்தில் சிக்கும் நிலை ஏற்படுகிறது.

கொடைக்கானல் மேல்மலை கிராமமான கூக்கால் பஞ்சாயத்துக்கு உட்பட்ட குண்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் காம்பவுண்டு சுவர் இன்று அதிகாலை இடிந்து விழுந்து கிடந்தது. காலையில் பள்ளிக்கு வந்த மாணவர்கள் இதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். ஏற்கனவே கடந்த சில நாட்களாக பெய்த கனமழையினாலும் தற்போது வீசிய சூறைக்காற்றினாலும் சுவர் இடிந்து விழுந்திருக்கலாம் என்று பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர். மாணவர்கள் யாரும் இல்லாத காரணத்தால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

பலத்த சூறைக்காற்றினால் பல இடங்களில் விளம்பர பலகைகள் விழுந்து வருவதுடன் காய்ந்த நிலையில் உள்ள மரங்களும் விழுந்து வருகின்றன. மாலை மற்றும் இரவு நேரங்களில் சாலையின் நடுவே மரக்கிளைகள் முறிந்து விழுவதால் வாகன ஓட்டுனர்கள் சிரமம் அடைகின்றனர்.

ஏரிச்சாலையையொட்டி உள்ள கீழ்பூமி பகுதியில் முறிந்து விழுந்த மரத்தால் திடீர் பரபரப்பு ஏற்பட்டது. அந்த சமயத்தில் வாகனங்கள் எதுவும் செல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் இதே நிலை நீடிக்கும் என்பதால் நகராட்சி மற்றும் மலை கிராமங்களில் சேதம் அடைந்து சாலையோரம் இருக்கும் மரக்கிளைகளை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

24.7.2024

# எனது வளர்ச்சிக்கு அவர்கள்தான் காரணம்: நடிகர் தனுஷ்



ஜூனியர் என்.டிஆருடன் இணைந்து நடிக்க ஆர்வமாக உள்ளது என்று நடிகர் தனுஷ் கூறினார்.

தமிழ் திரையுலகில் முன்னணி கதாநாயகனாக வலம் வரும் தனுஷ் 2017ல் பா. பாண்டி என்ற படத்தை டைரக்டு செய்து இருந்தார். தற்போது மீண்டும் ராயன் என்ற படத்தை இயக்கி கதாநாயகனாகவும் நடித்து இருக்கிறார். இதில் துஷாராவிஜயன்,அபர்ணாபாலமுரளி,பிரகாஷ்ராஜ், எஸ்.ஜே.சூர்யா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில் ஐதராபாத்தில் நடிகர் தனுஷ் அளித்த பேட்டியில் கூறியதாவது:

சரியான சமயத்தில் சரியான வாய்ப்புகள் வந்ததால்தான் நான் இந்த நிலையில் இருக்கிறேன். என் வளர்ச்சிக்கு காரணம் என் இயக்குனர்கள்தான். எனது தவறுகளை கூட அவர்கள் விரும்பினார்கள். மன்னித்தார்கள். என்னை உருவாக்கினார்கள். அவர்களின் ஆசிர்வாதத்தால் தான் எனக்கு இந்த வளர்ச்சி சாத்தியமானது. இயக்குனர் என்றால் எனக்கு மிகவும் இஷ்டம். அது ஒரு பொறுப்பும் கூட.

ராயன் படத்தை டைரக்டு செய்ததில் கொஞ்சம் பயமாக இருக்கிறது. தெலுங்கில் எனக்கு பிடித்த நடிகர் பவன் கல்யாண். எனக்கு ஜூனியர் என்.டிஆருடன் இணைந்து நடிக்க ஆர்வம் உள்ளது'' என்றார்.

# ஐஸ்வர்யா ராஜேஷ் படத்துக்கு கோர்ட்டு தடை



ஐஸ்வர்யா ராஜேஷ் தற்போது மலையாளத்தில் 'அஜயந்தே ரண்டம் மோஷனம்' என்ற படத்தில் நடித்து இருக்கிறார்.

தமிழ் திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ் தற்போது மலையாளத்தில் 'அஜயந்தே ரண்டம் மோஷனம்' என்ற படத்தில் நடித்து இருக்கிறார். இந்த படத்தை ஜித்தின் லால் இயக்கி உள்ளார். இதில் நாயகனாக டொவினோ தாமஸ் நடித்துள்ளார். இவர் தமிழில் தனுஷுடன் 'மாரி 2' படத்தில் நடித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'அஜயந்தே ரண்டம் மோஷனம்' படத்தை திரைக்கு கொண்டுவர ஏற்பாடுகள் நடந்தன. இந்த நிலையில் எர்ணாகுளத்தை சேர்ந்த டாக்டர் வினித் என்பவர் படத்துக்கு எதிராக கொச்சி முதன்மை கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதில் படத்தை தயாரிக்க தன்னிடம் ரூ. 3.20 கோடி பெற்று ஏமாற்றி விட்டதாகவும், எனவே படத்தை வெளியிடக்கூடாது என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

வழக்கை விசாரித்த கோர்ட்டு 'அஜயந்தே ரண்டம் மோஷனம்' படத்தை தியேட்டர் மற்றும் ஓடிடியில் வெளியிட தடை விதித்து உத்தரவிட்டது.

# பிறந்தநாளையொட்டி சிறப்பு வீடியோ வெளியிட்ட சூர்யா 44 படக்குழு




நடிகர் சூர்யா தற்போது கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் தனது 44வது திரைப்படத்தில் நடித்துவருகிறார். தற்காலிகமாக 'சூர்யா 44' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்த படத்தில் சூர்யாவுடன் இணைந்து பூஜா ஹெக்டே, கருணாகரன், ஜெயராம், ஜோஜு ஜார்ஜ் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசையமைக்கும் இந்த படத்துக்கு ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்கிறார்.

இந்த படம் பீரியாடிக் கேங்க்ஸ்டர் மற்றும் காதல் பின்னணியில் கதைக்களமாக கொண்டு உருவாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் இன்று (ஜூலை 23) நடிகர் சூர்யா தன்னுடைய 49வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். அவரது பிறந்தநாளை முன்னிட்டு 'சூர்யா 44' படக்குழு சிறப்பு வீடியோ ஒன்றை வெளியிட்டு வாழ்த்து தெரிவித்துள்ளது.

அந்த வீடியோவில் கேங்ஸ்டராக வரும் சூர்யா ஒருவரை துப்பாக்கியால் சுடுவது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. மேலும் வீடியோ முடிவில் படத்தின் டைட்டில் டீசர் விரைவில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# பா.ரஞ்சித் தயாரித்துள்ள 'பாட்டல் ராதா' படத்தின் முதல் பாடல் வெளியானது




இயக்குனர் பா.ரஞ்சித் நீலம் புரொடக்சன்ஸ் சார்பில் தயாரித்துள்ள திரைப்படம் 'பாட்டல் ராதா'. தினகரன் சிவலிங்கம் இயக்கியுள்ள இந்த படத்தில் குரு சோமசுந்தரம், சஞ்சனா நடராஜன், ஜான் விஜய் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு ரூபேஷ் ஷாஜி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீசர் சமீபத்தில் வெளியாகி வைரலானது. மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு நிரம்பிய எமோஷனல் ரோலர்கோஸ்டராக இந்த படம் இருக்கும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தின் முதல் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி 'யோவ் பாட்டலு'என்றபாடலின்லிரிக்வீடியோவெளியாகி உள்ளது. பாக்கியம் சங்கர் எழுதியுள்ள இந்த பாடலை கானா பாலமுருகன், கானா செல்ல முத்து, கானா அபிலோ ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# டிமான்ட்டி காலனி 2 படத்தின் ரிலீஸ் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு!




அருள்நிதி தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவராக வலம் வருபவர். இவர் வம்சம், மௌனகுரு, இரவுக்கு ஆயிரம் கண்கள், டைரி, கழுவேத்தி மூர்க்கன் என பல படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். இதற்கிடையில் கடந்த 2015ம் ஆண்டு அருள்நிதி, டிமான்ட்டி காலனி எனும் திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்த படத்தை அஜய் ஞானமுத்து இயக்கியிருந்தார். ஹாரர் திரில்லர் கதை களத்தில் வெளியான இந்த படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. அதைத்தொடர்ந்து கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் கழித்து 'டிமான்ட்டி காலனி ' படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி இருக்கிறது.

அஜய் ஞானமுத்து இயக்கியுள்ள இந்த படத்திற்கு 'டிமான்ட்டி காலனி 2' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் அருள்நிதி தவிர பிரியா பவானி சங்கர், அருண்பாண்டியன், விஜே அர்ச்சனா, மீனாட்சி கோவிந்தராஜன், முத்துக்குமார் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பி டி ஜி யுனிவர்சல் நிறுவனம் இந்த படத்தை தயாரித்துள்ள நிலையில் ஹரிஷ் கண்ணன் இதன் ஒளிப்பதிவு பணிகளை கவனித்திருக்கிறார். சாம் சி எஸ் படத்திற்கு இசையமைத்துள்ளார். ஏற்கனவே இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

அதைத்தொடர்ந்து மிரட்டலான டிரெய்லரும் வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை எக்கச்சக்கமாக அதிகப்படுத்தியது. எனவே ரசிகர்கள் பலரும் படமானது எப்போது ரிலீஸ் ஆகும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து வருகின்றனர். இந்நிலையில் இந்த படத்தினை தமிழ்நாட்டில் ரிலீஸ் செய்யும் உரிமையை ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளதாகவும் ஆகஸ்ட் மாதத்தில் படம் வெளியாக இருப்பதாகவும் படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாகஅறிவித்துள்ளனர். மேலும்படம் தொடர்பானஅடுத்தடுத்தஅப்டேட்டுகளும்விரைவில்வெளியாகும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் யோகிபாபுவின் சட்னி சாம்பார் வெப் தொடர்

தமிழ் சினிமாவில் முன்னணி நகைச்சுவை நடிகராக வலம் வருபவர் யோகிபாபு. இவர் நடிப்பில் வெளியான கோலமாவு கோகிலா, மண்டேலா, ஜெய்லர் உள்ளிட்ட திரைப்படங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன. இதனைத் தொடர்ந்து கடந்த வருடம் அட்லீ இயக்கத்தில் வெளியான 'ஜவான்' படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமானார்.

மேலும் சமீபத்தில் வெளியான குருவாயூர் அம்பலநடையில் படத்தில் நடித்து மலையாளத்திலும் அறிமுகமானார். இந்த நிலையில் யோகி பாபு தற்போது, 'சட்னி சாம்பார்' என்ற வெப் தொடரிலும் நடித்துள்ளார். இந்த தொடரில் அவர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

வாணி போஜன், மைனா நந்தினி, தீபா சங்கர், சம்யுக்தா விஸ்வநாத், அகிலன் மற்றும் கேசவ் ராஜ் ஆகியோரும் இதில் நடித்துள்ளனர். இந்தத் தொடரை இயக்குனர் ராதாமோகன் இயக்கியுள்ளார்.

இந்த நிலையில், 'சட்னி சாம்பார்' தொடர் குறித்த பதிவு ஒன்றை டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது. அதில் இந்த தொடர் வருகிற 26ந் தேதி முதல் ஒளிபரப்பப்படும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

ராதா மோகன் இயக்கும் முதல் வெப் தொடர் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# டி20 மற்றும் ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை சென்றடைந்த இந்திய கிரிக்கெட் அணி



இந்திய கிரிக்கெட் அணி விரைவில் இலங்கைக்கு சென்று அந்த நாட்டு அணிக்கு எதிராக மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. 20 ஓவர் ஆட்டங்கள் வருகிற 27, 28, 30ம் தேதிகளில் பல்லகலேவிலும், ஒரு நாள் போட்டிகள் ஆகஸ்டு 2, 4, 7ம் தேதிகளில் கொழும்புவிலும் நடைபெறுகிறது.

இந்த தொடருக்கான இந்திய டி20 அணி சூர்யகுமார் யாதவ் தலைமையிலும், ஒருநாள் அணி ரோகித் சர்மா தலைமையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இரு அணிகளுக்கும் சுப்மன் கில் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட கவுதம் கம்பீரின் பயணம் இந்த தொடருடன்தான் தொடங்க உள்ளது. இதனால் இந்த தொடர் எதிர்பார்ப்பை உண்டாக்கி உள்ளது.

இந்நிலையில் இந்த தொடரில் பங்கேற்பதற்காக மும்பையிலிருந்து புறப்பட்ட இந்திய கிரிக்கெட் அணி இலங்கை சென்றடைந்துள்ளது.

# சுப்மன் கில் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டது ஏன்..? தேர்வுக்குழு தலைவர் விளக்கம்




இந்திய கிரிக்கெட் அணி விரைவில் இலங்கைக்கு சென்று அந்த நாட்டு அணிக்கு எதிராக மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒருநாள்போட்டிகள்கொண்ட தொடரில்விளையாடுகிறது.

இலங்கை தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. தேர்வு குழு தலைவர் அஜித் அகர்கர்தலைமையிலானகமிட்டியினர், புதியபயிற்சியாளர் கவுதம் கம்பீர் ஆகியோரின் ஆலோசனைக்கு பிறகு அணி பட்டியல் இறுதி செய்து வெளியிடப்பட்டது.

உலகக்கோப்பையை வென்றதுடன் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ரோகித் சர்மா விடைபெற்று விட்டதால் இந்திய 20 ஓவர் அணியின் புதிய கேப்டன் யார் என்ற கேள்வி எழுந்தது. உலகக்கோப்பையில் துணை கேப்டனாக பணியாற்றிய ஆல்ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா கேப்டனாக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பாண்ட்யாவுக்கு அடிக்கடி உடல்தகுதி பிரச்சினை ஏற்படுவதால் அவருக்கு பதிலாக அதிரடி பேட்ஸ்மேன் சூர்யகுமார் யாதவை கேப்டனாக நியமிப்பதே சரியாக இருக்கும் என்பது பயிற்சியாளர் கம்பீரின் விருப்பமாக இருந்தது. முடிவில் இந்திய 20 ஓவர் அணியின் கேப்டன்ஷிப் 33 வயதான சூர்யகுமார் யாதவிடம் வழங்கப்பட்டுள்ளது. துணை கேப்டன் பதவியும் பாண்ட்யாவிடம் இருந்து பறிக்கப்பட்டு இருக்கிறது. சுப்மன் கில் இனி துணை கேப்டனாக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுப்மன் கில் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டதற்கான காரணம் பற்றி தேர்வுக்குழு தலைவர் அஜித் அகர்கர் தெளிவுபடுத்தியுள்ளார். இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "ரிஷப் பண்ட் காயத்தால் நீண்ட காலம் விளையாடவில்லை. எனவே மீண்டு வந்துள்ள அவரிடம் கேப்டன்ஷிப் சுமையை நாங்கள் கொடுக்க விரும்பவில்லை. கேஎல் ராகுல் தற்போது சர்வதேச டி20 கிரிக்கெட்டில் விளையாடுவதில்லை. எனவே நாங்கள் புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஹர்திக் பாண்ட்யா காயங்களை சந்தித்தபோது நல்லவேளையாக ரோகித் சர்மா கேப்டனாக செயல்பட்டார். ஆனால் நாங்கள் மீண்டும் அது போன்ற நிலைமையை விரும்பவில்லை. சுப்மன் கில் 3 பார்மட்டிலும் விளையாடக்கூடிய வீரராக நாங்கள் கருதுகிறோம். சில வருடங்களாக அவர் நல்ல தரத்தை காண்பித்துள்ளார்.

எனவே கேப்டன்ஷிப் பற்றி சூர்யகுமார், ரோகித் போன்றவர்களிடம் அடுத்த 2 வருடங்களில் கற்றுக்கொள்ள அவரைப் போன்றவரை நாங்கள் விரும்புகிறோம். ஏனெனில் திடீரென ஒருவர் காயம் அல்லது பார்மை இழக்கும்போது நாங்கள் புதிய கேப்டனை சோதிக்க விரும்பவில்லை. சுப்மன் கில்லிடம் ஓரளவு தலைமை பண்புகள் இருக்கிறது. வாழ்க்கையில் எதுவும் உறுதியானது கிடையாது. ஆனால் வருங்கால கேப்டனாக வளர்வதற்கு தேவையான அனுபவத்தை பெறுவதற்காகவே அவருக்கு இந்த பொறுப்பை நாங்கள் கொடுத்துள்ளோம்" என்று கூறினார்.

# ஒரு நாள் அவர் 3 வடிவிலான இந்திய அணிக்கும் கேப்டனாக இருப்பார் விக்ரம் ரத்தோர்




இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 27ம் தேதி தொடங்குகிறது. இதையடுத்து இந்த தொடருக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இதில் இந்திய டி20 அணிக்கு சூர்யகுமார் யாதவ் கேப்டனாகவும், ஒருநாள் அணிக்கு ரோகித் சர்மா கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். டி20 மற்றும் ஒருநாள் அணிகளுக்கு சுப்மன் கில் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் டி20 அணியில் இளம் வீரர்கள் அபிஷேக் சர்மா மற்றும் ருதுராஜ் ஆகியோர் கழற்றி விடப்பட்டு சுப்மன் கில் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டது ரசிகர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்நிலையில் விராட் கோலி, ரோகித் சர்மா ஆகியோர் கேப்டனாக பொறுப்பேற்ற பின்புதான் அபாரமாக செயல்பட்டதாக இந்திய அணியின் முன்னாள் பேட்டிங் பயிற்சியாளரான விக்ரம் ரத்தோர் தெரிவித்துள்ளார். அதுபோலசுப்மன்கில்இனிமேல்தான்இன்னும்அபாரமாகசெயல்படுவார்என்றுஅவர்நம்பிக்கைதெரிவித்துள்ளார். அதை விட சுப்மன் கில் வருங்காலத்தில் 3 வகையான இந்திய அணியின் கேப்டனாக செயல்படுவார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "குஜராத் டைட்டன்ஸ் மற்றும் ஜிம்பாப்வே தொடரில் அவர் கேப்டனாக நல்ல வேலையை செய்துள்ளார். அவர் நல்ல கேப்டன்ஷிப் திறமைகளை காண்பித்துள்ளார். ஒரு அணியை நீங்கள் வழி நடத்துவதற்கு அதுதான் மிகவும் முக்கியம். தற்போது துணை கேப்டன்ஷிப் பதவியை கொடுத்ததன் வாயிலாக பிசிசிஐ அவருக்கு எக்ஸ்ட்ரா பொறுப்பை கொடுத்துள்ளது. இந்த வேலையில் அவரும் அசத்துவார் என்று நான் உறுதியாக சொல்வேன். கேப்டன்ஷிப் பொறுப்புதான் விராட் கோலி, ரோகித் சர்மா ஆகியோரிடம் இருந்து சிறந்த செயல்பாடுகளை கொண்டு வந்தது.

அதேபோல சுப்மன் கில்லும் அசத்துவார் என்று நான் கருதுகிறேன். இன்னும் கேப்டனாக நியமிக்கப் படாவிட்டாலும் தலைமை பொறுப்பில் இருப்பதே அவரிடமிருந்து சிறந்த செயல்பாடுகளை கொண்டு வரும். ஏனெனில் மற்ற வீரர்களை வழி நடத்தும்போது உங்களிடம் எக்ஸ்ட்ரா பொறுப்பு ஏற்படும். அது நல்லது. குறிப்பாக சுப்மன் கில் போன்ற இளம் வீரருக்கு அது சிறப்பானது. ஒரு நாள் அவர் 3 வகையான அணியையும் கேப்டனாக வழி நடத்துவார்" என்று கூறினார்.

# மகளிர் டி20 கிரிக்கெட் வரலாற்றில் மாபெரும் சாதனை பட்டியலில் 2வது இடம் பிடித்த ஹர்மன்பிரீத் கவுர்

மகளிர் ஆசிய கோப்பை தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்தியா ஐக்கிய அரபு அமீரகம் (யு.ஏ.இ.) அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற யு.ஏ.இ. பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்தியா அதிரடியாக விளையாடி 201 ரன்கள் குவித்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ஹர்மன்பிரீத் கவுர் 66 ரன்களும், ரிச்சா கோஷ் 64 ரன்களும் குவித்தனர். யு.ஏ.இ. தரப்பில் அதிகபட்சமாக கவிஷா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 201 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடினமான இலக்கை நோக்கி களமிறங்கிய யு.ஏ.இ. அணி 20 ஓவர்கள் முழுமையாக விளையாடி 7 விக்கெட்டுகளை இழந்து 123 ரன்கள் மட்டுமேஅடித்தது.இதன்மூலம்78ரன்கள்வித்தியாசத்தில் யு.ஏ.இ. அணியை வீழ்த்திய இந்தியா நடப்பு தொடரில் 2வது வெற்றியை பதிவு செய்து அசத்தியது. யு.ஏ.இ. தரப்பில் அதிகபட்சமாக கவிஷா 40 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக தீப்தி சர்மா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் ஹர்மன்பிரீத் கவுர் அடித்த 66 ரன்களையும் சேர்த்து சர்வதேச மகளிர் டி20 கிரிக்கெட்டில் அவர் இதுவரை 3,415 ரன்கள் குவித்துள்ளார். இதன்மூலம் மகளிர் டி20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன்கள் குவித்த வீராங்கனைகளின் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் மெக் லானிங்கை (3,405 ரன்) பின்னுக்கு தள்ளி 2வது இடத்தை பிடித்துள்ளார். இந்த பட்டியலில் முதலிடத்தில் நியூசிலாந்து வீராங்கனை சுசி பேட்ஸ் (4,348 ரன்) உள்ளார்.



**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**

**நயனுடை யான்கண் படின்**

**விளக்கம்:**

**ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.